# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

فَابْتَغُوا عِنْدَ اللَّهِ الرِّزْقَ



جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

إِنَّمَا تَعْبُدُونَ مِن دُونِ اللَّهِ أَوْثَانًا وَتَخْلُقُونَ
إِفْكًا إِنَّ الَّذِينَ تَعْبُدُونَ مِن دُونِ اللَّهِ لَا
يَمْلِكُونَ لَكُمْ رِزْقًا فَابْتَغُوا عِندَ اللَّهِ الرِّزْقَ
وَاعْبُدُوهُ وَاشْكُرُوا لَهُ إِلَيْهِ تُرْجَعُونَ

அல்லாஹ்வையன்றி, சிலைகளை வணங்குகிறீர்கள் மேலும், நீங்கள் பொய்யைச் சிருஷ்டித்துக் கொண்டீர்கள், நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர நீங்கள் வணங்கி வரும் இவை உங்களுக்கு ஆகார வசதிகள் அளிக்கச் சக்தியற்றவை. ஆதலால், **நீங்கள் அல்லாஹ்விடமே ஆகார வசதிகளைத் தேடுங்கள்** அவனையே வணங்குங்கள், அவனுக்கே நன்றி செலுத்துங்கள், அவனிடத்திலேயே நீங்கள் திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள்.

**திருக்குர்ஆன் 29:17**

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

1

اَللّٰهُمَّ اغْفِرْلِيْ، وَارْحَمْنِيْ، وَعَافِنِيْ، وَارْزُقْنِيْ

அல்லாஹும் மக்(غ)பி(ف)ர்லீ வர்ஹம்னீ
வஆபி(ف)னீ வர்ஸு(ز)க்னீ

"இறைவா! என்னை மன்னிப்பாயாக! எனக்கு கருணை புரிவாயாக! எனக்கு ஆரோக்கியத்தை வழங்குவாயாக! எனக்கு வாழ்வாதாரத்தை அளிப்பாயாக!"

அறிவிப்பாளர்: அபூ மாலிக் அல் அஷ்ஜயி ஸஃத் பின் தாரிக் (ரலி) அவர்கள், முஸ்லிம் 5229

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

2

رَبِّ اِنِّیْ لِمَاۤ اَنْزَلْتَ اِلَیَّ مِنْ خَیْرٍ فَقِیْرٌ

ரப்பி இன்னி லிமா அன்ஸ(ز)ல்த
இலைய்ய மின் கைரின் ப(ف)கீர்

என் இறைவா! நீ எனக்கு இறக்கி அருளும் நல்லவற்றின்பால் நிச்சயமாக நான் தேவையுள்ளவனாக இருக்கின்றேன்

திருக்குர்ஆன் 28:24

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

3

اللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْهُدٰى
وَالتُّقٰى وَالْعَفَافَ وَالْغِنٰى

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்கல் ஹுதா, வத்துகா, வல் அ(ف)பா(ف)ப வல் (غ)கினா

இறைவா ! உன்னிடம் நான் நேர்வழியையும், இறையச்சத்தையும், சுயகட்டுப்பாட்டையும், தன்னிறைவையும் வேண்டுகிறேன்.

**முஸ்லிம் 5265**

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

4

اللّٰهُمَّ اكْفِنِيْ بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ
وَأَغْنِنِيْ بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ

**அல்லாஹும்மக்பி(ف)னீ பிஹலாலிக**
**அன் ஹராமிக வ அக்(غ)னினீ பிப(ف)ள்லிக**
**அம்மன் ஸிவாக்.**

யா அல்லாஹ்! நீ விலக்கியதை விட்டும் நீ
ஆகுமாக்கியதைக் கொண்டும் எனக்கு போதுமாக்குவாயாக!
மேலும் உனது கிருபையைக் கொண்டு
உன்னை தவிர உள்ள அனைத்தை விட்டும்
என்னை தேவையற்றவனாக ஆக்குவாயாக !

**திர்மிதீ 3563**

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

5

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ
وَالْعَجْزِ وَالْكَسَلِ وَالْبُخْلِ
وَالْجُبْنِ وَضَلَعِ الدَّيْنِ وَغَلَبَةِ الرِّجَالِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மினல் ஹம்மி
வல் ஹஸ(ز)னி வல் அஜ்(ز)ஸி வல்கஸலி
வல் புக்லி வல் ஜுபுனி வளலஇத் தைனி
வக(غ)லபதிர் ரிஜால்

இறைவா! துக்கம், கவலை, பலவீனம், சோம்பல், கஞ்சத்தனம், கோழைத்தனம், கடன் சுமை, மற்றவர்களின் அடக்குமுறை ஆகிய அனைத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அபூதாவூத் 1555 , புகாரி 5425,6369

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

6-A

اللَّهُمَّ رَبَّ السَّمَوَاتِ وَرَبَّ الأَرْضِ وَرَبَّ الْعَرْشِ الْعَظِيمِ رَبَّنَا
وَرَبَّ كُلِّ شَيْءٍ فَالِقَ الْحَبِّ وَالنَّوَى وَمُنْزِلَ التَّوْرَاةِ وَالإِنْجِيلِ
وَالْفُرْقَانِ أَعُوذُ بِكَ مِنْ شَرِّ كُلِّ شَيْءٍ أَنْتَ آخِذٌ بِنَاصِيَتِهِ
اللَّهُمَّ أَنْتَ الأَوَّلُ فَلَيْسَ قَبْلَكَ شَيْءٌ وَأَنْتَ الآخِرُ فَلَيْسَ
بَعْدَكَ شَيْءٌ وَأَنْتَ الظَّاهِرُ فَلَيْسَ فَوْقَكَ شَيْءٌ وَأَنْتَ الْبَاطِنُ
فَلَيْسَ دُونَكَ شَيْءٌ اقْضِ عَنَّا الدَّيْنَ وَأَغْنِنَا مِنَ الْفَقْرِ

அல்லாஹும்ம ரப்பஸ் ஸமாவாதி வரப்பல் அர்ழி வரப்பல் அர்ஷில் அழீம். ரப்பனா வரப்ப குல்லி ஷய்இன் ஃபாலிகல் ஹப்பி வந்நவா, வமுன்ஸிலத் தவ்ராதி வல் இன்ஜீலி வல் புஃர்கானி அஊதுபிக மின் ஷர்ரி குல்லி ஷய்இன் அன்த ஆஹிதும் பினாஸியதிஹி, அல்லாஹும்ம அன்தல் அவ்வலு ஃபலைஸ கப்லக ஷய்உன், வஅன்தல் ஆகிரு ஃபலைஸ பஃதக ஷய்உன், வஅன்தழ் ழாஹிரு ஃபலைஸ ஃபவ்கக ஷய்உன், வஅன்தல் பாதினு ஃபலைஸ தூனக ஷய்உன், இன்ழி அன்னத் தைன வஅக்ஃனினா மினல் ஃபக்ரி

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். முஸ்லிம் 7064

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

6-B

இறைவா! வானங்களின் அதிபதியே! பூமியின் அதிபதியே! மகத்தான அரியணையின் அதிபதியே! எங்கள் இறைவா! அனைத்துப் பொருட்களின் அதிபதியே! தானிய வித்துகளையும் விதைகளையும் பிரி(த்து தாவர வர்க்கத்தை முளைப்பி)ப்பவனே! தவ்ராத், இன்ஜீல், ஃபுர்கான் (குர்ஆன்) ஆகிய வேதங்களை அருளியவனே! அனைத்துப் பொருட்களின் தீங்கிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன். அவற்றின் முன்நெற்றி ரோமங்களை நீயே பிடித்துள்ளாய். இறைவா! நீயே ஆரம்பமானவன்; உனக்கு முன்னர் வேறெதுவும் இல்லை. நீயே இறுதியானவன்; உனக்குப் பின்னர் வேறெதுவும் இல்லை. நீயே மேலானவன்; உனக்கு மேலே வேறொன்றுமில்லை. நீயே அடித்தளமானவன்; உனக்குக் கீழே வேறொன்றுமில்லை. எங்கள் கடன்களை நிறைவேற்றி வைப்பாயாக! வறுமையிலிருந்து காத்து எங்களைத் தன்னிறைவு கொள்ளச்செய்வாயாக!

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள். முஸ்லிம் 7064

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

7-A

اَللَّهُمَّ اهْدِنِي فِيمَنْ هَدَيْتَ , وَعَافِنِي فِيمَنْ عَافَيْتَ ،
وَتَوَلَّنِي فِيمَنْ تَوَلَّيْتَ ، وَبَارِكْ لِي فِيمَا أَعْطَيْتَ ،
وَقِنِي شَرَّ مَا قَضَيْتَ ، إِنَّكَ تَقْضِي وَلَا يُقْضَى عَلَيْكَ ،
إِنَّهُ لَا يَذِلُّ مَنْ وَالَيْتَ ، تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ

அல்லாஹும் மஹ்தினீ ஃபீமன் ஹதைத். வஆஃபினி ஃபீமன் ஆஃபைத். வ(த்)தவல்லனீ ஃபீமன் தவல்லைத். வபாரிக்லீ ஃபீமா அஃதைத். வகினீ ஷர்ர மா கதைத். இன்னக தக்ழீ வலா யுக்ழா அலைக். இன்னஹு லாயதில்லு மன்வாலைத். தபாரக்த ரப்பனா வ(த்)தஆலைத்.

ஹஸன் இப்னு அலீ(ரலி) அவர்கள், நஸாயீ 1744

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

7-B

இறைவா! நீ நேர்வழி காட்டியவர்களுடன் சேர்த்து எனக்கும் நேர்வழி காட்டுவாயாக! நீ ஆரோக்கியம் அளித்தவர்களுடன் சேர்த்து எனக்கும் ஆரோக்கியம் அளிப்பாயாக! நீ பொறுப்பேற்றுக் கொண்டவர்களுடன் சேர்த்து எனக்கும் பொறுப்பேற்றுக் கொள்வாயாக! நீ எனக்குத் தந்திருப்பவற்றில் பரக்கத் செய்வாயாக! நீ விதியாக்கியவைகளில் உள்ள கெடுதியை விட்டும் என்னைக் காப்பாயாக! நிச்சயமாக நீயே விதிப்பவன், உன் மீது எதையும் விதிக்க முடியாது. நிச்சயமாக நீ யாரை நேசித்து விட்டாயோ அவர் இழிவடைய மாட்டார். எங்கள் இறைவா! உன் அருள் விசாலமானது, உன் மகத்துவம் மேலானது.

ஹஸன் இப்னு அலீ(ரலி) அவர்கள், நஸாயீ 1744

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

8

رَبِّ اغْفِرْ لِي وَارْحَمْنِي وَاجْبُرْنِي
وَارْزُقْنِي وَارْفَعْنِي

ரப்பிக்(غ)பி(ف)ர்லீ வர்ஹம்னீ வஜ்புர்னீ
வர்ஸு(ز)க்னீ வர்ப(ف)ஃனீ

என் இறைவனே! என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள் புரிவாயாக! எனக்கு ஆறுதல் அளித்திடுவாயாக! எனக்கு ரிஸ்கை வழங்குவாயாக! என்னை உயர்த்திடுவாயாக!

இப்னுமாஜா 898

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

9

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ عِلْمًا نَافِعًا، وَرِزْقًا طَيِّبًا، وَعَمَلًا مُّتَقَبَّلًا

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)க இல்மன் நாஃபிஆ, வ ரிஸ்(ز)கன் தய்யிபா, வ அமலன் முதகப்பலா

யா அல்லாஹ் ! நான் உன்னிடம் பயனுள்ள கல்வியையும், பரிசுத்தமான (ஹலாலான) வாழ்வாதாரத்தையும், ஒப்புக்கொள்ளப்பட்ட நற்செயலையும் கேட்கின்றேன்.

குறிப்பு : இச்செய்தியை இமாம் இப்னு ஹஜருல் அஸ்கலானி (ரஹ்) ஹஸன் என்றும், ஷைக் அல்பானி (ரஹ்) ஸஹீஹ் என்வும் குறிப்பிடுகின்றனர்.

அறிவிப்பாளர்: உம்மு ஸலமா (ரலி) அவர்கள், இப்னு மாஜா 762

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

10-A

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْأَلُكَ مِنْ فَضْلِكَ وَرَحْمَتِكَ
فَإِنَّهُ لَا يَمْلِكُهَا إِلَّا أَنْتَ

அல்லாஹும்ம இன்னீ அஸ்அலு(க்)க மின் பழ்லிக வ ரஹ்மதிக ஃபஇன்னஹு லா யம்லிகுஹா இல்லா அன்த

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், தபரானி 10379

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

10-B

யா அல்லாஹ்! உனது நற்பாக்கியத்திலிருந்தும், அருளிலிருந்தும் உன்னிடம் கேட்கிறேன். உன்னைத் தவிர அதற்கு அதிகாரம் படைததவர்கள் வேறு எவரும் இல்லை.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு முறை ஒரு விருந்தினர் வந்தார். நபி(ஸல்) அவர்கள் தனது மனைவியரிடம் ஏதும் உணவு இருக்கின்றதா ? என்று பார்த்து வருமாறு ஆளனுப்பினார்கள், ஆனால் எந்த உணவும் அவர்களிடம் இருக்கவில்லை. அப்போது நபியவர்கள் இந்த பிரார்த்தனையை ஓதினார்கள். அவர்களுக்கு பொறித்த ஒரு ஆடு அன்பளிப்பாக வந்தது. இது அல்லாஹ்வின் நற்பாக்கியத்தில் நின்றும் உள்ளதாகும், அவனது ரஹ்மத்தை நாம் எதிர்பார்த்தவர்களாக இருக்கின்றோம் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

குறிப்பு : இச்செய்தியை ஷைக் அல்பானி (ரஹ்) ஸஹீஹ் என குறிப்பிடுகின்றார்கள்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள், தபரானி 10379

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள் 11

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ

சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி

அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து
அவன் தூயவன் எனத் துதிக்கிறேன்

ஒவ்வொன்றும் துதி செய்யும் வார்த்தைகளாகும், இதைக் கொண்டே படைப்பினங்கள் உணவு அளிக்கப்படுகின்றன

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள், அஹ்மத் 809

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

12

أَسْتَغْفِرُ اللَّهَ

அஸ்தக்(ﻍ)பி (ﻑ)ருல்லாஹ்

**நான் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன்.**

மேலும், "நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள், நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன் என்றும் கூறினேன். "(அப்படிச் செய்வீர்களாயின்) அவன் உங்கள் மீது தொடர்ந்து மழையை அனுப்புவான். அன்றியும் அவன் உங்களுக்குப் பொருள்களையும், புதல்வர்களையும் கொண்டு உதவி செய்வான். இன்னும், உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்குவான். உங்களுக்காக ஆறுகளையும் (பெருக்கெடுத்து ஓடுமாறு) உண்டாக்குவான்.

**அல்குர்ஆன் 71: 10-12**

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

13-A

اللَّهُمَّ اغْفِرْ لِي وَاهْدِنِي وَارْزُقْنِي وَعَافِنِي ،
أَعُوذُ بِاللَّهِ مِنْ ضِيقِ الْمَقَامِ يَوْمَ الْقِيَامَةِ

(10 முறை ஓத வேண்டும்)

அல்லாஹும்மக்(غ)பி(ف)ர்லீ வஹ்தினீ
வர்ஸு(ز)க்னீ, வஆபி(ف)னீ அஊதுபில்லாஹ்
மின் ழீகில் மகாமி யவ்மல் கியாமா.

யா அல்லாஹ் என்னை மன்னிப்பாயாக! எனக்கு நேர்வழி காட்டுவாயாக ! எனக்கு வாழ்வாதாரத்தை வழங்குவாயாக! எனக்கு ஆரோக்கியத்தைத் தருவாயாக! கியாமத்து நாளின் நெருக்கடியிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன் .

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், நஸாயீ 1617, அபூதாவூத் 766

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

13-B

நபி (ﷺ) அவர்கள் இரவுத் தொழுகையை எதைக் கொண்டு ஆரம்பிப்பார்கள் என ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்ட போது

அல்லாஹு அக்பர் 10 முறை,

அல்ஹம்துலில்லாஹ் 10 முறை,

ஸுப்ஹானல்லாஹ் 10 முறை,

லா இலாஹ இல்லல்லாஹ் 10 முறை,

அஸ்தக்ஃபிருல்லாஹ் 10 முறை,

அல்லாஹும்மக்ஃபிர்லீ, வஹ்தினீ, வர்ஸுக்னீ, வஆஃபினீ

அஊதுபில்லாஹ் மின் ழீகில் மகாமி யவ்மல் கியாமா என 10 முறையும் கூறுவார்கள்.

குறிப்பு: அஷ்ஷைக் அல்பானி (ரஹ்) இதை ஸஹீஹ் எனக் குறிப்பிடுகின்றார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) அவர்கள், நஸாயி 1617, அபூதாவூத் 766

# வாழ்வாதாரத்தைக் கேட்கும் துஆக்கள்

14

اللَّهُمَّ ارْزُقْ آلَ مُحَمَّدٍ قُوتًا

அல்லாஹும்மர்ஸு(ز)க் ஆல

முஹம்மதின் கூ(த்)தா

"அல்லாஹ்வே!

முஹம்மதின் குடும்பத் தாருக்கு

உணவு வழங்குவாயாக!"

என்று அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள்

பிரார்த்தித்தார்கள்.

குறிப்பு: அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்களிடம் நமக்குச் சிறந்த முன்மாதிரியுள்ளது. எனவே நாமும் அன்னாரைப் பின்பற்றி அல்லாஹ்விடமே வாழ்வாதாரத்தைப் பிராத்திப்போமாக !

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) அவர்கள், புகாரி 6460